**கம்பஹா மாநகர சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கம்பஹா மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கம்பஹா மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி வரையில் வேலை பூர்த்தி செய்யப்படாத 05 செயற்திட்டங்களில் 04 செயற்திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 24,490,000 நடைமுறை வேலைக் கணக்கிலும் 1 | ஏற்றுக்கொள்கின்றோம். 2022 இன் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2022 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணிப்பீடு செய்யப்பட்ட வேலை பூர்த்தி செயற்திட்டங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 1,897,200 தொகை பிழையாக கட்டிட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக் கணக்கிலும் வரவு வைக்கப்பட்டு ரூபா 26,387,200 கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | | பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கிலும் வேலை பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களின் பெறுமதி நடைமுறை வேலை கணக்கிலும் வரவு வைத்து பிழையாக வரவு வைக்கப்பட்ட பெறுமதி திரண்ட நிதியக் கணக்கிலும், மொத்த கூட்டுப் பெறுமதி கடன்கொடுத்தோர் கணக்கிலும் செலவு வைத்து மீதி சரி செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 3,843,725 ஆன கொஹா மற்றும் நெக்பா என்ற 02 மென்பொருளின் கிரயம் அல்லது தற்போதைய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது ஆதனங்கள் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரி செய்யப்படும். | சரியாக கணக்கிடு செய்தல் வேண்டும். |
| (இ) | களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட 20 நுகர்வுப் பொருள் விடயங்களின் பெறுமதி ரூபா 188,409 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தற்போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் இனங்காணப்பட்டுள்ள 20 இருப்பு விடயங்கள், விநியோகிக்கப்பட்டுள்ள மையால் அதன் செலவின பொறுப்பு நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் சீராக்கப்பட்டு சரி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வேலைகளுக்குரிய பிரதேச சபை பிரதேச செயலகத்தின் மூலம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய ரூபா 136,305 இற்குரிய வேலைக் கடன்கொடுத்தோர் பெறுமதி மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண மீதி ரூபா 136,305 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தகாரருக்கு செலுத்தாமையால் கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (உ) | 2021 ஆம் ஆண்டிற்கான விரிவான வருமானம் கணிப்பிடப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் தனியாக காண்பிக்கப்படல் வேண்டும். அந்தக் கணிப்பீட்டிற்காக மீளாய்வாண்டின் மிகைப் பெறுமதி ரூபா 181,048,126 எடுக்கப்படாத மிகையில் இனங்காணப்படாது மூலதன செலவின மானியம் ரூபா 29,692,677 தொகையை எடுத்ததன் காரணமாக ஆண்டிற்கான விரிவான வருமானம் ரூபா 151,355,449 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். கணக்கு கூற்று தயாரிக்கும் போது பிழைகளை சரி செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | நிலுவைக் கடை வாடகை ரூபா 1,098,050 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்குறிப்பின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (எ) | பொருள் பெறுவனவு பத்திர இலக்கம் 909 இன் கீழ் களஞ்சியத்திற்கு கிடைத்த ரூபா 7,181,520 பெறுமதியான பொருட்களுக்காக 2020 மார்ச் 26 ஆந் திகதிய உறுதிச்சீட்டு இலக்கம் 68 இன் மூலம் வழங்கும் நிறுவனத்திற்கு ரூபா 6,985,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியதாக ரூபா | பதிலளிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் செலுத்தி இறுதி செலவினத்திற்காக கடன் கொடுத்தோராக எதிர்காலத்தில் மீண்டும் செலுத்துதல் முடியாது. |

7,181,520 தொகை பிழையாக கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் பட்டோலை சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 139,269,409 ஆன கடன்கொடுத்தோர் மீதியை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | உரிய பிரிவுகளிலிருந்து கிடைத்த கடன்கொடுத்தோர் மீதியின் கூட்டுத்தொகை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தனிப்பட்ட மீதி பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**1.7.1 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலியக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரை, மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 மற்றும் 186 ஆம் பிரிவுகள் மற்றும் மேல் மாகாண சபையின் மாநகர சபை நிதி நிர்வாகத்திற் குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக கட்டளை இலக்கம் 25 | - | மாநகர சபைக்கு கிடைக்கின் நன்கொடைகளை செலவு வைப்பதற்காக கம்பஹா அரசாங்க வங்கியில் தனியான கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டு ''நகராதிபதி நிதியம்'' என்ற பெயரில் தனியாக நிதியமொன்று தாபிக்கப்பட்டிருந்தது. | வங்கிக் கணக்கிற்குரிய தகவல்கள் தீயினால் அழிவடைந்திருந்ததாக நகர பிதாவினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 185 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய் விற்காக தேவையான தகவல்களை சமர்ப்பிப் பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) | 371 | 691,745 | 2015 திசெம்பர் 08 ஆந் திகதி நெக்பா அவுஸ்ரேலிய இணையத்தளத்திற்காக மற்றும் 2018 ஒக்தோபர் 09 ஆந் திகதி சம்பள முற்பணமாக வழங்கப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா 682,745 தொகையான 02 செயல்நிமித்த உப கட்டுநிதிகள் 2022 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. | பொறியியலாளர் பிரிவில் தகவல்கள் தேடப்படுகின்றது. | உபகட்டு நிதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 571(1) மற்றும் (2) | 31,187,813 | 02 வருடங்களை விஞ்சிய ஒப்பந்த நிறுத்தி வைத்தலில் 172 வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 13,427,498 மற்றும் நானாவித வைப்பு மீதி ரூபா 1,418 என்பவற்றின் பெறுமதி ரூபா 17,760,315 என்பவை ஓய்வுபெறச் செய்யப்பட்டிருக்க வில்லை. | அந்த வைப்புக்களை மீண்டும் மீளாய்வு செய்து நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் மீள செலுத்தவதற் கோ அல்லது வருமானத் திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் 2004 யூலை 09 ஆந் திகதிய LG/5/2004 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | மாநகர சபையின் பிணை வைக்க வேண்டிய 27 உத்தியோகத்தர்கள் ஊழியர் பிணை வைத்திருக்கவில்லை | பிணை வைப்பதற்காக உத்தியோகத்தர் களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் பிணை வைக்காதிருந்ததுடன் மீண்டும் அந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத் தர் களிடமிருந்து பிணையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2019 திசெம்பர் - 24 ஆந் திகதிய 2155/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் படி மாநகர சபை நிதி நிர்வாகத்திற் குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை இலக்கம் 08 | ஒவ்வொரு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், சமமான நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 106 நாட்கள் தாமதமாகி அதாவது 2022 யூன் 15 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | பதியளிக்கப்பட வில்லை. | வர்த்த மானியின் படி நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதிக்கு முன்னர் கணக்காய் விற்கு வழங்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மிகை ரூபா 181,048,126 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 132,650,873 ஆகும்.

**2.2 வருமான நிர்வாகம்**

**வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

**2.2.1 வீதவரியும் வரியும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1946 இன் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனவரி மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். கம்பஹா மாநகர சபையின், கம்பஹா அலுவலகம், யக்கல உப அலுவலகத்தின் ஆதனவரி அலகுகள் முறையே 10665 மற்றும் 20892 இற்காக முறையே | நடப்பாண்டிற்குரிய ஆதனவரி வருமானம் ரூபா 48.2 மில்லியன் மற்றும் நிலுவை ஆதனவரி வரி ரூபா 18.3 மில்லியன் ஆகும். தற்போதும் வருமான பரிசோதகர்களினால் அது தொடர்பான அறிக்கை வருமான உபகுழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை | கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஆதனவரி மதிப்பீடு செய்து புதிய வீதத்தின் பிரகாரம் ஆதனவரி வருமானத்தை அறவிடுவதற்கும், ஆதனங்களை மெய்மையாய்வு செய்வதன் மூலம் ஆதனவரி |

| | | | |
|---|---|---|---|
| | 2011 மற்றும் 2005 என்ற ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி அறவிடப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் ஆதனங்களை மதிப்பீடு செய்து ஆதனவரி ஆதனங்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் மாநகர சபைக்கு சேகரிக்க முடியுமாகவிருந்த கணிசமான ஆதனவரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது. | வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 70,222,909 ஆக இருந்ததுடன் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 01 வருடத்திற்கு குறைந்த, 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான, 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான, 05 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடையிலான மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் அறவிட வேண்டிய மீதி முறையே ரூபா 8,327,494 தொகை ரூபா 23,343,776 தொகை, ரூபா 14,394,483 தொகை, ரூபா 18,245,366 தொகை மற்றும் ரூபா 5,911,790 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரி செலுத்துதலை புறக்கணித்துள்ள மொத்த காணிகளின் கீழ் உள்ள ஆதனங்கள் ஆகும். பௌதீக ரீதியில் காணப்படாத ஆதனங்களுக்கு சிட்டையிடுவதை நிறுத்துவதற்கும் மற்றும் நிலுவை ஆதனவரியை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். பதவியணியினரின் உதவியுடன் மற்றும் முறையான செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் நிலுவை வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதனவரி மீதி அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பஹா பிரதான அலுவலகத்தில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட | ரூபா 50,000 இற்கு மேற்பட்ட சகல மீதிகள் தொடர்பாகவும் வருமான பரிசோதகர்களினால் | நிலுவை ஆதனவரி மீதி அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலுவை ஆதனவரி மீதி, பெறுமதியின் பிரகாரம் பகுப்பாய்வு செய்யுமிடத்து ஆதனவரி அலகுகளின் நிலுவை பெறுமதி ரூபா 100,000 இற்கு மேற்பட்ட 13 அலகுகளின் பெறுமதி ரூபா 2.340,044 தொகையும், அலகொன்றின் பெறுமதி ரூபா 50,000 இற்கும் ரூபா 100,000 இற்கும் இடையிலான ஆதனவரி அலகுகள் 29 இன் பெறுமதி ரூபா 1,938,294 தொகையும், ரூபா 25,000 இற்கும் ரூபா 50,000 இற்கும் இடையிலான ஆதனவரி அலகுகள் 88 இனது பெறுமதி ரூபா 3,053,932 தொகையும், ரூபா 25,000 இற்கு குறைந்த ஆதனவரி அலகுகள் 1,127 இன் பெறுமதி ரூபா 5,544,250 தொகையும் அவதானிக்கப்பட்டதுடன் ஒரு பெறுமதி கணிசமான ஆதனவரி மீதி அலகுகளின் பெறுமதி கணிசமான ஆதனவரி வரி மீதி தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளின் குறித்துரைத்த அறிக்கையொன்று வருமான உபகுழுவிற்கு அனுப்பி தேவையான நடவடிக்கைகளுக்காக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது . | |

## 2.2.2 குத்தகை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை குத்தகை வாடகை பெறுமதி ரூபா 4,781,517 மற்றும் ஆண்டில் அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 9,020 ஆனமையால் 99 சதவீதத்தை அறவிடுவதற்கு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வாடகை அறவிடப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் ஆண்டில் சிட்டையிடப்பட்ட வாடகைப் பெறுமதி ரூபா 6,909,761 மற்றும் ஆண்டில் அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 2,870,321 ஆனமையால் 58 சதவீதத்தை அறவிடுவதற்கு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | வாடகை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

### 2.2.3 கைத்தொழில் மற்றும் வியாபார வரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவை பெறுமதி ரூபா 855,590 மற்றும் அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 219,400 ஆனமையால் 74 சதவீதம் அறவிட வேண்டிக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நிலுவை மீதிக்காக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற செயற்பாடுகளின் செயல்முன்னேற்றத்தின் படி ஆவணங்கள் நாளதுவரையாக்கப்படாமையாலும் மீதிகள் காணப்பட்டது. வழக்கு விபரங்கள் நகர சட்ட உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ஆலோசனையின் படி சரி செய்யப்படும். | நிலுவை மீதியில் நடப்பாண்டில் அறவிடும் பதிவேடு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2.4 களியாட்ட வரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலுவை வருமான அறிக்கையின் படி மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 5,067,942 மற்றும் ஆண்டின் போது அறவிடப்பட்ட மீதி ரூபா 130,254 ஆனமையால் 98 சதவீதம் அறவிட வேண்டிக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | பப்ளிக் சினிமா மண்டபத்தில் நிலுவை களியாட்ட வரி ரூபா 5,200,450 தொகையை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. ஏனையவைகளை அவற்றுக்குரிய சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கோவைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை களியாட்ட வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2.5 ஏனைய வருமானங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலுவை வருமான அறிக்கையின் படி மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு ஏனைய வருமான நிலுவை மிதி ரூபா 92,481,251 ஆக இருந்த போதும் ஆண்டின் போது அறவிடப்பட்ட மீதி ரூபா 47,050,116 ஆனமையால் 49 சதவீதம் அறவிட வேண்டிக் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2.6 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலுவை வருமான அறிக்கையின் படி மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் உள்ளவாறு வியாபார அனுமதிப்பத்திர கட்டண நிலுவை மீதி ரூபா 562,661 ஆக இருந்த போதும் ஆண்டில் அறவிடப்பட்ட மீதி ரூபா 240,233 ஆனமையால் அறவிடப்படாத சதவீதம் 57 சதவீதமாக காணப்பட்டது. | 2018 ஆம் ஆண்டில் ரூபா 24,850 தொகை தவிர ஏனைய மீதிகளுக்காக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றத்தின் பிரகாரம் ஆவணங்களை நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிலுவை வியாபார அனுமதிப்பத்திர கட்டண மீதி தொடர்பாக நடப்பாண்டில் சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும், உரிய அதிகார தரப்பினரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கணக்கு மீதிகளை சரி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2.7 வீட்டு வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிலுவை வருமான அறிக்கையின் படி நடப்பாண்டில் சிட்டையிடப்பட்ட வீட்டு வாடகை பெறுமதி ரூபா 306,563 இனால் ஆண்டில் | ஆண்டில் சிட்டையிடப்பட்ட பெறுமதி நகர கணக்காளரின் வாடகை சிட்டையிடலினால் அதிகரித்திருந்தது. | வீட்டு உரிமையாளர்களிடமிருந்து அல்லது அறவிடுவதை புறக்கணித்த தரப்பினர் |

| | | |
|---|---|---|
| அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 76,279 ஆனமையால் 75 சதவீதம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | களிடமிருந்து நிலுவை மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வாடகை உரிமையாளர் மரணமடைந்திருந்த வீடொன்றிலிருந்து 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்பட்ட நிலுவை வாடகை பெறுமதி ரூபா 54,909 தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்தவரின் நிலுவை மீதியை பதிவழிப்பதற்கும் நிலுவை மீதியை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதி தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |

### 2.2.8 வியாபார நிலைய வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் ஆரம்பத் திகதியில் காணப்பட்ட நிலுவையாகவிருந்த வியாபார நிலைய வாடகை மீதி ரூபா 29,902,189 இல் ஆண்டின் போது அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 12,981,050 ஆனமையால் அறவிடப்படாத சதவீதம் 57 வீதமாக இருந்ததுடன் ஆண்டில் சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 33,010,159 இல் அறவிடப்பட்ட பெறுமதி ரூபா 21,861,369 ஆனமையால் 34 சதவீதம் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை செலுத்துவதற்காக அறிவித்ததன் பின்னர் செலுத்தாதிருந்த வியாபார நிலையங்களை முத்திரையிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாடகை உரிமையாளர்களிட மிருந்தோ அல்லது அறவிடுதல்களை புறக்கணித்த தரப்பினர்களிடமிருந் தோ நிலுவையாகவிருந் த வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பஹா அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் 437 கடைகளிலிருந்து ரூபா 24,824,956 அறவிட வேண்டிக் காணப்பட்டதுடன் அந்த காலப்பகுப்பாய்வின் பிரகாரம் நிலுவையாகவிருந்த காலம் 5 இற்கும் 10 வருடங்களுக்கும் இடையில் | செலுத்தப்படாத வியாபார நிலையங்களை முத்திரை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடை உரிமையாளர் களிடமிருந்தோ அல்லது அறவிடல்களை புறக்கணித்த தரப்பினரிட மிருந்தோ நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 38 கடைகளுக்குரிய நிலுவை மீதி ரூபா 6,452,259 தொகையும், 3 இற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான 40 கடைகளுக்குரிய நிலுவை மீதி ரூபா 1,374,022 தொகையும் , 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான 71 கடைகளுக்குரிய நிலுவை மீதி ரூபா 7,805,488 தொகையும், 01 வருடத்திற்கு குறைந்த 288 கடைகளுக்குரிய நிலுவை மீதி ரூபா 9,193,227 தொகையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | யக்கல உப அலுவலகத்திற்குரிய 12 கடைகளில் ரூபா 225,525 நிலுவை மீதியொன்று அறவிட வேண்டிக் காணப்பட்டது. | பதிலளிக்கப்படவில்லை. | கடை உரிமையாளர் களிடமிருந்தோ அல்லது அறவிடல்களை புறக்கணித்த தரப்பினரிட மிருந்தோ நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 221 கடைகளின் நிலுவைக் கடை வாடகை ரூபா 6,281,610 தொகை நாட்குறிப்பு பதிவுகள் இன்றி கடை வாடகை வருமானத்தில் கணக்கீடு செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலும் வருமானம் குறைக்கப்பட்டு, பிழையாக கணக்கு செய்யப்பட்டு பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 266(அ) பிரிவின் படி ஆளுனரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்ட நிலுவை வருமானத்தை மீண்டும் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த துடன் பதிவழித்தல் நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

**2.2.9 கேள்வி ஆதன வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கேள்வி ஆதன வருமான பதிவேட்டின் பிரகாரம் வருடாந்த கேள்வி கையளிக்கப்படுகின்ற 06 கேள்வி ஆதனங்கள், 2017, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகள் முதல் காணப்படுகின்ற ரூபா 1,205,250 நிலுவை வருமானம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,205,205 ஆன 03 ஆதனங்களுக்கு வழக்கு தொடர்தலும், ரூபா 516.518 இற்குரிய 02 ஆதனங்களுக்கு சட்ட உத்தியோகத்தருக்கு சமர்ப்பித்தலும் ரூபா 30,409 ஆன ஒரு ஆதனத்திற்கு பிடியாணை அனுப்புவதற்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கேள்வி ஆதன வருமானம் கேள்வி ஆதன உரிமையாளர் களிடமிருந்து அல்லது செலுத்துதல்களை புறக்கணித்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2.10 வாடிவீட்டு வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வாடிவீட்டு கட்டண பதிவேட்டின் படி 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை வாடிவீட்டு வாடகை ரூபா 5,954,355 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நகர அபிவிருத்தி அதிகார சபையால் வாடிவீடு கையேற்கப்பட்டுள்ளது. நிலுவை மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வாடிவீட்டை மீண்டும் நகர சபைக்காக கையேற்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவை வாடிவீட்டு கட்டணம் நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து அல்லது செலுத்துதல்களை புறக்கணித்த தரப்பினர் களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.1 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 ஆம் ஆண்டில் கழிவுகளை அகற்றும் கேள்விக்காக 2021 ஏப்ரல் 19 ஆந் திகதி கூடப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தம்பவத்த கழிவுப் பொருள் அகற்றுகின்ற நிலையத்தில் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக மற்றும் பொதுமக்கள் பாதிப்பிற்கு உட்படுதல் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. 2021 ஏப்ரல் 21 ஆந் திகதி மற்றும் 2021 மே 19 ஆந் திகதி பொது சுகாதார பரிசோதகர்களின் அறிக்கையின் படி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமை, உக்காத கழிவுப்பொருட்கள் குவிந்திருந்தமை, தளத்தை மேவுகை செய்யாதிருந்தமை மற்றும் கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சி செய்யாமை போன்ற காரணங்களால் சுகாதார பாதுகாப்பு தொடர்பாக மற்றும் பொதுமக்கள் பாதிப்பிற்கு உட்படுத்தல் தொடர்பாக தம்புவத்த கழிவுப்பொருட்களை அகற்றுதல் பரிந்துரை செய்ய மடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கும் போது அந்த இடத்தில் கழிவுகளை போடுவதற்கு நகர ஆணையாளரால் சபைக்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் கெரவலப்பிட்டி கழிவுப்பொருள் தயத்திற்கு கழிவுப் பொருட்களை கொண்டு போடுவதற்காக ரூபா 12,728,244 தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு பரிந்துரை செய்யாத தம்புலுவத்த கழிவுப்பொருள் தளத்திற்கு கழிவுப் பொருட்கள் கொண்டு போடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 12,664,000 செலவினம் செய்யப்பட்டிருந்தது. | கம்பஹா மேல்நீதிமன்றம் 2015 பெப்ரவரி 13 ஆந் திகதிய வழக்கு இலக்கம் திருத்தம் 10/15 இன் மூலம் வழங்கப்பட்டிருந்த தீர்ப்பின் படி தம்புவத்தைக்கு கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டிருந்தது. இந்தக் காணி விசாலமாக இருந்தமை, அருகில் வீடுகளோ அல்லது நீர்த்தேக்கங்களோ காணப்படாமை, கழிவுகளை போக்குவரத்துச் செய்தல் கேள்விதாரரினால் மேற்கொள்ளப்பட்டமை, அகற்றப்படுகின்ற கழிவுகளோ லோட் அளவிற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றமை கெரவலப்பிட்டி கழிவுப் பொருள்களை கொண்டு போடுவதற்காக எரிபொருள், மேலதிகநேரப் படி போன்றவை செலுத்த வேண்டியிருந்தமை, போதியளவான டிப்பர் வண்டி காணப்படாமையின் அடிப்படையில் தம்புலுவத்த கழிவுப் பொருள் தளத்திற்கு கழிவுப்பொருள் கொண்டு போடப்பட்டிருந்தது. கெரவலப்பட்டி மாதத்திற்கு ரூபா இருபது இலட்சம் நிலுவைப் பணம் செலுத்தி கழிவுப் பொருள் கொண்டு போடப்பட்ட போதிலும் செலவின நடவடிக்கைகள் மற்றும் தம்புவத்தைக்கு கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக ரூபா | கழிவுப் பொருட்களை பயன்படுத்தி கூட்டுப்பசளை உற்பத்தி, வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இருபது இலட்சம் செலவாகின்றமையால் தம்புவத்தைக்கு கழிவுப் பொருட்கள் கொண்டு போடப்பட்டிருந்தது. | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நகர சபை பிரதான அலுவலகத்திற்காக சூரிய வலு சக்தி முறைமையை தாபித்தல் | | |
| தேசிய போட்டியாளர் முறைமையின் கீழ் கூறுவிலைகள் கோரும்போது கிடைக்கப்பெற்ற இரண்டு நிறுவனங்களில் ஒரு நிறுவனம் வெளிநாட்டு விமானப் பயணச்சீட்டுக்கள் விற்பனை முகவர் நிறுவனமாக இருந்தமை மற்றும் கேள்வி ஆவணங்களில் நிறுவனத்தின் முகவரி, இலட்சனை மற்றும் அல்லது நிறுவனத்தின் பெயர் குறிப்பிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்ட போதிலும் கேள்விச் சபை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அந்த நிறுவனத்தின் கூறுவிலைகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி 2021 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த இந்த செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும் 2022 யூன் 28 ஆந் திகதியின் பின்னர் செயலாற்றல் பிணைமுறியின் திகதி நீடிக்கப்பட்டிருக்க வில்லை. செயற்திட்டத்தின் மூலம் மாதாந்த மின்சார | கூறுவிலைகள் கிடைக்கப் பெற்ற 02 நிறுவனங்களின் யூரோப்பா சோலர் எனர்ஜி தனியார் நிறுவனம், பிறைட் டுவர் தனியார் நிறுவனமாக பதிவு செய்திருந்த போதிலும் யூரோப்பா சோலர் எனர்ஜி தனியார் நிறுவனம் கூறுவிலை சமர்ப்பித்திருந்தது. 2022 செப்தெம்பர் 30 வரையான காலத்தை நீடிப்பதற்கு உரிய ஒப்பந்தக்காரரிடம் கோரிக்கை விடப்பட்டிருந்தது. | கேள்வி கோரும் போது முன்னைய தகைமைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கேள்வி மதிப்பீட்டின் போது பெறுகை முறைமைக்கு இணங்க வேண்டியிருந்த துடன் உடன்படிக்கை செய்யப்பட்ட காலஎல்லையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கும் அதன் மூலம் அலுவலக மின்சாரப் பட்டியலை குறைத்துக் கொள்வதற்கும் செயலாற்றல் பிணை முறியின் திகதியை நீடித்துக் கொள்வதற்கும் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளும் |

| | | | |
|---|---|---|---|
| | பட்டியல் சேமிக்கப்படுவதாக கருதி 2022 ஆம் ஆண்டில் மின்சார செலவினத்திற்காக நிதியேற்பாடு ஒதுக்கப்படாதிருந்த போதிலும் செயற்திட்டம் தாமதமடைந்ததன் காரணமாக 2021 ஒக்தோபர் மாதம் முதல் 2022 செப்தெம்பர் மாதம் வரை ரூபா 2,624,659 தொகை மின்சார பட்டியலாக செலுத்தப்பட்டிருந்தது.<br>மேலும் 2021 நவம்பர் 09 ஆந் திகதி ிலையான வைப்பு சான்றிதலை பிணையாக வைத்து சபையால் கோரப்பட்டிருந்த ரூபா 5,500,000 கடன் தொகையின் தவணைப்பணமான ரூபா 1,650,000 முற்பணம் அல்லது ஆற்றப்பட்ட வேலைக்கான கொடுப்பனவாக இனங்கண்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமல் அத்திகதியில் கடன் பெறப்பட்ட வங்கியால் உடன்படிக்கை செய்யப்பட்ட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | | போது கொடுப்பனவு நடைமுறைகளை பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | யக்கல கடைத் தொகுதியின் கடைகளுக்கு கேள்வி கோரல்<br>-------------------------------------------------- | | |
| (i) | நகர அபிவிருத்தி அதிகார சபையால் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட யக்கல கடைத்தொகுதிக்காக ரூபா 201,419,246 தொகையான மதிப்பீடு 2008 யூன் 13 ஆந் திகதி சபை அங்கீகரித்திருந்த போதிலும் நிர்மாணத்திற்காக நிதியேற்பாடு வழங்குதல் தொடர்பாக குறித்துரைத்த விடயங்கள் காண்பிக்கப்படாமையின் காரணமாக திட்டங்கள் தயாரித்து 12 வருடங்கள் | சபையின் நிதி நெருக்கடிகளினால் செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டு மீண்டும் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பித்த கொரோனா தொற்றுநோய் நிலைமை மற்றும் எரிபொருள் நெருக்கடிகளின் காரணமாக தாமதமடைந்திருந்த போதிலும் தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது. | செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடந்திருந்த போதிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (ii) | யக்கல் சந்தைத் தொகுதியில் 103 கடைகளை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் வாடகைக்கு வழங்குவதற்காக ஒவ்வொரு கடைக்காகவும் ஆகக்குறைந்த கேள்வியொன்று தீர்மானிக்கப்பட்டு 2008 ஆகஸ்ட் 13 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டிருந்தது. இதன் போது 41 கடைகளுக்காக கூறுவிலைகள் கிடைத்திருக்கவில்லை. 2014 யூன் 16 ஆந் திகதி மீண்டும் கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும் 41 கடைகளுக்காகவும் கூறுவிலைகள் கோரப்பட வேண்டியிருந்த போதிலும் அதனிடையே 15 கடைகள் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. 26 கடைகளுக்காக இரண்டாவது தடவை கூறுவிலை கோராமையின் காரணமாக 2014 யூலை 11 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் படி ஆகக்குறைந்த கேள்வி தீர்மானிக்கப்பட்டிருந்தது. | 2008 ஆம் ஆண்டின் போது முதலாவது தடவை கேள்வி கோரும் போது கடை இலக்கம் 34, 41, 42, 44, 46 மற்றும் 48 இற்காக கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அதற்காக பணம் செலுத்தி கடைகளை பெற்றுக் கொள்ளாமையினால் மீண்டும் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. | கூறுவிலைகள் கிடைக்காதிருந்த 41 கடைகளுக்காக மாத்திரம் இரண்டாவது தடவை கூறுவிலை கோரப்படல் வேண்டும். |
| (iii) | நிலுவை முற்பணம் காணப்படுகின்ற 22 கடைகள் சபைக்கு கையேற்று புதிய மதிப்பீட்டின் கீழ் மீண்டும் கேள்வி கோரி வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் ஒரேயொரு கடை பல சந்தர்ப்பங்களின் போது பல்வேறு நபர்களுக்கு சபைத் தீர்மானம் மற்றும் வெளிப்படுத்தல் உடன்படிக்கையின் | பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்த செயற்திட்டம் தாமதம் அடைந்ததன் அடிப்படையில் உடன்படிக்கை செய்த தரப்பினருக்கு கடைகளை வழங்க முடியாதிருந்தமை, மீண்டும் பணத்தை வழங்கும் இயலுமை காணப்படாமையினால் பணத்தின் உரித்தை கையேற்பதற்கு | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மீண்டும் கேள்வி கோரி உச்ச விலையில் வாடகைக்கு வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் பெறுகை வழிகாட்டிகளுக்கு முரணாக கையளிக்கப்பட்டிருந்தது. | அங்கீகாரம் வழங்கி அதற்காக ரூபா 5,000 அறவிட்டு கையளிப்பதற்கு சபை தீர்மானித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருந்தது. | |
| (iv) | முற்பணம் ஒரே தடவையில் பெற்று அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யாமையின் காரணமாக 2008 ஆம் ஆண்டு முதல் 2021 நவம்பர் மாதம் வரை 39 கடைகளிலிருந்து ரூபா 57,355,771 முற்பண நிலுவை ஏற்பட்டிருந்ததுடன் அதில் 28 கடைகள் ரூபா 55,991,842 தொகையான நிலுவை 2022 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது 39 கடைகளின் நிலுவை காணப்பட்ட போதிலும் தற்போது 10 கடைகளில் மாத்திரம் நிலுவை உள்ளது. | முற்பணம் ஒரே தடவையில் பெற்று உடன்படிக்கை செய்து கடைகளை நிர்மாணித்து வாடகைக்கு வழங்குதல் வேண்டும். |
| (v) | 2021 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 10 முன்கடை உரிமையாளர்கள் இருந்த போதிலும் 16 கடைகள் ஒதுக்கப்பட்டமையால் 06 கடைகள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தமையும் அந்தக் கடைகள் மதிப்பீடு செய்யப்படாதிருந்தமையும், 2021 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் முற்பணம் அறவிட்டு கடைகள் பெற்றுக் கொள்ளப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டு வரையில் சகல கடைகளுக்காகவும் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீட்டை மேற்கொண்டு புதிய வீதத்தின் அடிப்படையில் உடன்படிக்கை செய்து வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | 2008 ஆம் ஆண்டின் மதிப்பீடு அல்லது கேள்வி கோரலின்றி 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கடை இலக்கம் 54 கையளிக்கப்பட்டு 2016 யூலை 21 ஆந் திகதி வேறொரு நபருக்கு கையளித்து 2017 பெப்ரவரி 07 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு முற்பணமாக ரூபா 1,560,000 அறவிடப்பட்டிருந்தது. | 2008 இன் போது 54 கடைகள் கேள்வி கோராமல் கோவையின் தகவல்கள் இன்றிய கடைகளுக்காக வருமான பரிசோதகரின் மதிப்பீடு ரூபா 156,000 ஆக வழங்கப்பட்டிருந்தது. | முறையான மதிப்பீடொன்றை பெற்று கேள்வி கோரி உடன்படிக்கை செய்து கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | 2008 ஆம் ஆண்டின் போது கடைத்தொகுதி ரூபா 201,419,246 மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டு வரை பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 165,837,207 தொகையில் அதாவது ஆரம்ப மதிப்பீட்டில் 82 சதவீதத்திற்கு சமமான உப மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | காலதாமதம் ஏற்படாத வகையில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் நிர்மாணித்தல் வேண்டும். |
| (viii) | 2019 யூலை 18 ஆந் திகதி சபைத் தீர்மானம் மசதீ/26/2019 இன் பிரகாரம் ஆகக்குறைந்த கேள்வி தரைமாடிக்கு ஒரு சதுரஅடி ரூபா 15,000 தொகையும், முதலாம் மாடி ரூபா 7,500 தொகையும், இரண்டாம் மாடி ரூபா 3,250 தொகையும் வீதம் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த மதிப்பீட்டை கவனத்தில் கொள்ளாமல் 2008 இன் ஆகக்குறைந்த மதிப்பீட்டிற்கு 2021 ஆம் ஆண்டின் போது 15 கடைகளுக்காக மாத்திரம் முற்பணம் அறவிட்டமையால் சபைக்கு ரூபா 7,335,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | ஆகக்குறைந்த கூறுவிலைகள் கோரப்பட்டமையால் கௌரவ நகர பிதாவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | புதிய காலரீதியான மதிப்பீட்டைச் செய்து கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ix) | 2021 சனவரி 18 ஆந் திகதி முற்பண நிலுவைக் கடை உரிமையாளர்களின் கடைகளை கையேற்று, ஆகக்குறைந்த கேள்விக்கு கேள்வி கோரிய கடைகளை கையளிப்பதற்கு தீர்மானித்திருக்கும் போது அதற்கு முரணாக நகர பிதாவினால் முகநூலில் குறிப்பிடப்பட்டமையால் 09 கடைகள் கையளிக்கப்பட்டிருந்தது. | ஆகக்குறைந்த கேள்விக்கு கூறுவிலைகள் கோருவதற்காக கௌரவ நகர பிதாவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | புதிய காலரீதியான மதிப்பீட்டைச் செய்து கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) ஆதனங்களை மீள்மதிப்பீடு செய்யாமை<br>---------------------------------------------------<br>2021 ஆம் ஆண்டில் சபைக்குச் சொந்தமான 16 டிறெயிலர்கள், 07 மயான நிலங்கள், ஏனைய 03 காணிகள் மற்றும் 02 நிழற்படபிரதி இயந்திரங்கள் என்பன மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மீள் மதிப்பீடு செய்து ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்குகளில் உள்ளடக்கப்படும். | உரிய சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆட்சேர்த்தல்<br>------------------------<br>2019 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 29/2019 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு வேலை / கள தொழிலாளர்கள் 37 பேர் மற்றும் சுகாதார தொழிலாளர்கள் 22 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். 2014 நவம்பர் 12 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இன் 05 ஆம் இலக்க பிரிவின் படி உரிய நியமனம் வழங்கியதன் பின்னர் பதவியணியினரை நாளதுவரையாக்குவதற்காக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளருக்கு தாமதமின்றி அறிக்கையிட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் பதவியணியினர் நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. அதன் காரணமாக கம்பஹா மாநகர சபையால் அந்த ஊழியர்களுக்காக | 29/2019 சுற்றறிக்கையின் படி சேர்க்கப்பட்ட 59 ஊழியர்களையும் அங்கீகரித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரையும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மீண்டும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளரிட மிருந்து பதவியணியினர் நாளதுவரையாக்கி கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டிற்காக சம்பளமாக ரூபா 24,081,350 தொகையும், 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 23,666,750 தொகையும், 2022 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு ரூபா 8,345,050 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 56,093,150 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் சபை நிதியத்திற்கு செலவின பொறுப்பாக இருந்தது. | | |

(ஆ) ஊழியர் கடன்

--------------------------

| | | |
|---|---|---|
| இடமாற்றம், ஓய்வுபெறல் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு நியமித்தல் போன்ற காரணங்களினால் அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதி 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையில் 06 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 328,234 தொகை மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட 47 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 351,369 தொகை என்பவற்றை அறவிடுவதற்கு எடுக்காதிருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி காணப்பட்ட இலங்கை மின்சார சபைக்கு நியமிக்கப்பட்ட 07 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 35,170 தொகை மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற 34 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 262,417 தொகையும் 2022 ஒக்தோபர் 05 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதி காலப்பகுப்பாய்வின் படி 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான மீதியில் ரூபா 260,169 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளது. 10 வருடங்களை விட மேற்பட்ட மீதியில் ரூபா 53,780.90 தொகையும் அறவிடப்பட்டுள்ளது. 07 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 35,170 அறவிடுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஓய்வூதிய ஊழியரிடமிருந்து மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 14 மயான நிலங்களின் பெறுமதி ரூபா 539,182,170 ஆன 10 மயான நிலங்கள் மற்றும் 35 காணிகளின் பெறுமதி ரூபா 1,286,624,700 ஆன 06 காணிகளின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சட்டரீதியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் மயான நிலங்கள், வெளியீட்டு உறுதிகளை தயாரிப்பதற்காக அளவிடல் நடவடிக்கைகள் செய்யப்படுவதுடன் அளவிடப்பட்ட காணி மற்றும் மயான நிலங்களுக்காக வெளியிட்டு உரித்துறுதி தயாரித்தல் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | உரித்தை உறுதிப்படுத்து வதற்கு சட்டரீதியான ஆவணங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மாநகர சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற வீதிகளின் அளவு 2,249 ஆக இருந்த போதிலும் அவை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நில வரைபடம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க செலவினத்தை கட்டுப்படுத்தும் சுற்றறிக்கையின் பிரகாரம் அளவிடல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நிதியேற்பாடும் கிடைத்ததும் உடனடியாக மேற்கொள்ளப்படும் என அறியத் தருகின்றோம். | வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் சபைக்கு கையளிப்பதற்கும் நில வரைபடங்களை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் மூன்று வருடங்கள் மாத்திரம் கடந்திருந்த டிறக்டர், 2021 சனவரியின் பின்னர் ஓட்டத்தில் அகற்றப்பட்டிருந்த முச்சக்கர வண்டி மற்றும் வீதி செப்பனிடுகை இயந்திரம் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத பொருட்களாக காண்பிக்கப்பட்ட போதிலும் நிதிப்பிரமாணம் 770 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அவற்றின் பெறுமதி மேலும் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. | பொருள் மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆம் ஆண்டின் போது உடம்பவத்த உள்ளக கரப்பந்தாட்ட விளையாட்டரங்கிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 5,230,606 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்தினால் இந்த நிர்மாணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாதிருந்ததாகவும் சில நிர்மாணங்கள் துருப்பிடித்து இருந்ததாகவும் அறிக்கையிடப்பட்டிருந்தது. அந்த பரிந்துரையினை கவனத்தில் கொள்ளாமல் துருப்பிடித்த நிர்மாணங்களை அகற்றாமல் 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதி முதல் 2020 திசெம்பர் 15 ஆந் திகதி வரையான காலத்தில் கழிவுப்பொருள் மாற்றல் நிலையமொன்று நிர்மாணித்து ரூபா 8,840,741 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் கழிவுப்பொருள் மாற்றல் நிலையத்தை அபிவிருத்தி செய்து ஒரு மாதம் சென்ற 2021 சனவரி 14 ஆந் திகதி அந்த சுற்றாடலில் கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா மற்றும் நகர பூங்கா ஆகியவற்றை உள்ளடக்கிய செயற்திட்டத்திற்காக வழங்குவதற்கு சபை அங்கீகாரமின்றி 2021 நவம்பர் 05 ஆந் திகதிய கமநச/நாஇ01/04/2021 ஆம் இலக்க கடிதம் மூலம் நகராதிபதியால் இணங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2003 ஆம் ஆண்டில் ரூபா 5,230,606 தொகை செலவில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 8,840,741 செலவில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் | உடம்பவத்த உள்ளக விளையாட்டரங்கு நிர்மாண நடவடிக்கைகளை நிறுத்தியதன் காரணமாக வெற்றிடமான நிலம் 2019 ஆம் ஆண்டு முதல் கழிவுப்பொருள் தளத்திற்கு பொருத்தமானதாக தயாரித்து கழிவுப்பொருள் மாற்றல் நிலையமாக பயன்படுத்தப்படுகின்றது. தமது தியத்த உயன செயற்திட்டத்தை பயன்பாடுடையதாகவும் மற்றும் காலரீதியான செயற்திட்டமாக இருந்தமையால் கழிவுப் பொருள் தளம் மற்றும் கழிவுப்பொருள் மாற்றல் நிலையம் இந்த இடத்திலிருந்து அகற்றி இன்னுமொரு பொருத்தமான இடத்தில் தாபித்து புதிய செயற்திட்டத்திற்காக நிலத்தை வழங்குவதற்கு நகர சபையால் இணங்கப்பட்டிருந்தது. | துருப்பிடித்த நிர்மாணங்களை அகற்றுதல் மற்றும் கணிசான செலவினங்களை செய்து தயாரிக்கப்பட்ட கழிவுப்பொருள் மாற்றல் நிலையம், கழிவுப் பொருள் மாற்றல் நிலையமொன்றாக பயன்படுத்துதல் வேண்டும். அபிவிருத்தி நடவடிக்கைகளை செய்யும் போது நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கூட்டுத்தொகையான ரூபா 14,071,341 தொகை சபை நிதியத்திலிருந்து செய்யப்பட்ட பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.6 இணங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 முதல் 2015 வரை சேவையாற்றில் 37 செயற்திட்ட ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 10(1) மற்றும் 10(2) இன் பிரகாரம் ஊழியர்களிடமிருந்தும் சேவை பெறுனர்களிடமிருந்தும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய முறையே ரூபா 1,432,826 மற்றும் ரூபா 2,149,239 தொகைகளுடன் செலுத்துதல் புறக்கணித்ததன் காரணமாக மிகைக் கட்டணம் ரூபா 1,791,032 ஆக கூட்டுப்பெறுமதி ரூபா 5,373,097 சபையினால் செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. இதனால் ரூபா 2,742,757 தொகை 2022 யூன் 30 ஆந் திகதியளவில் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக சபையினால் பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கு 2022 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த ஊழியர்களுக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பு பணமான ரூபா 1,904,229 தொகையில் ரூபா 648,463 | எதிர்காலத்தில் இது தொடர்பான தேவையான தகவல்களை வழங்கி அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து தகவல்களை உறுதிப்படுத்தி அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொறுப்பு வாய்ந்த தரப்பினர் தொடர்பாக நிதிப் பிரமாணம் 156 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை 2022 யூலை 30 ஆந் திகதியளவில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,255,765 சபையினால் செலுத்த வேண்டி காணப்பட்டது. | | |
| (ஆ) | மின்சார சிட்டையில் உரிய காலநேரத்தில் தீர்க்காமையின் காரணமாக தாமதக் கட்டணமாக ரூபா 295,958 செலுத்த வேண்டியேற்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 104,343 தொகை 2021 நவம்பர் 24 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | இதனை அகற்றுவதற்கு இலங்கை மின்சார சபையிடம் கோரிக்கை விடப்பட்ட போதிலும் நிராகரிக்கப்பட்டமையால் சபை தீர்மானமொன்றை எடுத்து செலுத்தப்பட்டிருந்தது. | பட்டியல்களை குறித்துரைத்த திகதியில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் செலுத்துதல்களை புறக்கணிக்கின்ற பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 156 இன் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 பெறுகைகள்

### பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |